செ.வெ.எண்:37 நாள்:19.09.17

## பத்திரிக்கைச் செய்தி

### சிறுபான்மையின மாணவ/மாணவியர்களுக்கு மத்திய அரசின் கல்வி உதவித்தொகை.

தமிழ்நாட்டில் மைய அரசால் சிறுபான்மையினராக அறிவிக்கப்பட்டுள்ள இஸ்லாமியர், கிறித்துவர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் ஜெயின் மதத்தைச்சார்ந்து அரசு, அரசு உதவி பெறும் மற்றும் மைய/ மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் 2017- 18 ம் கல்வியாண்டில் 1-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகையும் (Prematric Scholarship) பதினோராம் வகுப்பு முதல் ஆராய்ச்சி வகுப்பு வரை (ஐடிஐ, ஐடிசி,வாழ்க்கை தொழிற்கல்வி, பாலிடெக்னிக்,செவிலியர், ஆசிரியர் பட்டப்படிப்பு, இளங்கலை, முதுகலை பட்டப்படிப்புகள் உட்பட) பயில்பவர்களுக்கு பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகையும் மற்றும் தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயில்பவர்களுக்கு தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை பெறுவதற்காக ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க புதியது மற்றும் புதுப்பித்தல் இனங்களுக்கு 31.08.2017 வரையிலும் என நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவானது வரும் 30.09.2017 வரையிலும் காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே இவ்வரிய வாய்ப்பினை கடலூர் மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து சிறுபான்மையினர் மாணவ, மாணவியர்களும் வரும் 30.09.2017க்குள் இணையதளத்தின் மூலம் விண்ணப்பித்து பயனடையுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை தொடர்பு கொள்ளலாம்.

13/9

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கடலூர்.

வெளியீடு:- செ.ம.தொ. அ. கடலூர்.